## மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 66 /2023 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
| பெயர் : திருமுருகானந்த் | அ.சா. 7 | நாள் : 03.11.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.7 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமுருகானந்த் | தாலுக்கா | : | கும்முடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | சத்தியமூர்த்தி | தொழில் | : | மருத்துவ அறுவை சிகிச்சை துறை பேராசிரியர் |
| கிராமம் | : | | வயது | : | 52 |

( எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் அரசு ஸ்டான்லி மருத்துவ கல்லூரியில் அறுவை சிகிச்சை துறை பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.07.2018 ம் தேதி காலை 3.26 மணிக்கு அறுவை சிகிச்சை துறைக்கு 27 வயது மதிப்பு மிக்க திருமலை என்பவரை அவசர சிகிச்சை பகுதியில் அனுமதிக்கப்பட்டு அவரை நான் பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. கீழ் தாடையின் ஈறு பகுதி கிழிந்த நிலையிலும் பல் ஆட்டத்துடனும் காணப்பட்டது.

2. தாடையில் வலி உணரப்பட்டது.

அதற்காக அவரது தலைபகுதி மற்றும் நெஞ்சுபகுதி நுண்கதிர் படமும், மூளை மற்றும் முக தாடை பகுதிக்கு சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை மற்றும் ஊசிகள் அளிக்கப்பட்டது. மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை துறை மற்றும் பல் தாடை முக அறுவை சிகிச்சை துறைக்கு மேல் சிகிச்சை பரிந்துரைக்காக அனுப்பப்பட்டது. சிடி ஸ்கேன் அறிக்கையில் தாடையில் எலும்பு முறிவு காணப்பட்டது. பல் அறுவை சிகிச்சை துறையினர் பரிந்துரை படி கொடுங்காயம் என்று நான் சான்றளித்தேன். என்னிடம் காட்டப்படும் சான்று நான் அளித்தது தான். (**அந்த திருமலையின் காயச்சான்று அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேற்படி நபரானவர் மருத்துவமனையிலிருந்து 21.07.2018 ம் தேதி மாலை 2 மணிக்கு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

அதே போல், 16.07.2018 ம் தேதி அதிகாலை 2.50 மணிக்கு 40 வயது மதிப்பு மிக்க சுகுந்தன் என்பவர் மேற்படி அதே மருத்துவமனையில் அவசர சிகிச்சை பகுதியில் அனுமதிக்கப்பட்டு அவரை நான் பரிசோதித்ததில் கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1. இடது முன்னந்தலையில் தையல் இடப்பட்ட 5 செமீ நீளமுள்ள காயம் காணப்பட்டது.

அவருக்கு அதற்காக அவரது தலைபகுதி மற்றும் நெஞ்சுபகுதி நுண்கதிர் படமும், மூளை சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டது. அவருக்கு மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை துறைக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டது. அதன்பேரில் அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று சான்றளித்தேன். என்னிடம் காட்டப்படும் சான்று நான் அளித்தது தான். (**அந்த சுகுந்தனின் காயச்சான்று அதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மேற்படி நபரானவர் மருத்துவமனையிலிருந்து 19.07.2018 ம் தேதி மாலை 3 மணிக்கு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

திருமலை என்பவர் பொன்னேரி அரசு மருததுவமனையிலிருந்து பரிந்துரை செய்யப்பட்டவர் என்றால் சரிதான். நான் பொது அறுவை சிகிச்சை பேராசிரியராக உள்ளேன். பற்கள் மற்றும் மூளை தொடர்பான அறுவை சிகிச்சை நான் மேற்கொள்ளமாட்டேன் என்றால் சரிதான், கழுத்து மற்றும் அதற்கு கீழே உள்ள பகுதிகளுக்கு மட்டும் நான் அறுவை சிகிச்சை மேற்கொள்வேன் என்றால் சரிதான். திருமலைக்கு ஏற்பட்ட காயம் புதிய காயமா அல்லது பழைய காயமா என்றால் புதிய காயம் ஆகும். போலிசார் விசாரணையில் நான் மேற்படி விவரத்தை தெரிவித்துள்ளேன். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எந்த போலிஸ் என்னை விசாரித்தார்கள் அவரது பதவி என்ன என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எவ்வளவு நேரம் என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றாலும் நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி திருமலை என்பவரின் பல் சிகிச்சை தொடர்பான அறிக்கையை போலிசாரிடம் அளித்தேனா என்றால் அவரது விசாரணைக்கு பிறகு தான் அறிக்கை வந்தது. எந்த குறிப்பிட்ட பல் மருத்துவருக்கு பரிசோதனைக்காக நான் அனுப்பினேன் என்றால் பல்மருத்துவ துறைக்கு

அனுப்பினேன். எந்த பல் மருத்துவர் சிகிச்சை மேற்கொண்டார் என்ற விவரம் உள்ளதா என்றால் அவரது கையொப்பம் கேஸ்ஷிட்டில் உள்ளது அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை. அந்த கையொப்பம் இட்ட மருத்துவர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். செபஸ்டியன் பண்டிட் பிரகதிஷ் என்பவர் மூளை தொடர்பான சிடி ஸ்கேன் அறிக்கையை வழங்கினார். சிடி ஸ்கேனை பார்வையிட்டு அதில் முறிவு உள்ளதாக நான் தான் கருத்துரை வழங்கினேன் என்றாலும் செபஸ்டியன் பண்டிட் பிரகதிஷ் என்பவர் கருத்துரை வழங்கவில்லை என்றாலும் சரிதான். மேற்படி கருத்துரையை அளிப்பதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு சம்பந்தமில்லாத துறைக்கு நான் கருத்துரை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல உரிய மருத்துவரிடம் அறிக்கை பெற்று அதன் பின்னர் தான் அறிக்கை வழங்கியுள்ளேன். ஒரு கடினமான பொருட்கள் மீது விழும்போது மேற்படி இரண்டு விதமான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். சுகுந்தன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் பழைய காயம் என்றால் சரியல்ல, அவருக்கு பொன்னேரி மருத்துவமனையில் தையல் போடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது. எந்த தேதியில் சுகுந்தனுக்கு தையல் போடப்பட்ட விவரம் அறிக்கையில் இல்லை என்றால் சரிதான். சுகுந்தனுக்கு ஏற்பட்ட காயத்திற்கான வயது கூறமுடியுமா என்றால் வீக்கத்திற்கு மட்டும் தான் வயது கூறமுடியும் கிழிந்த காயத்திற்கு தையல் போடப்பட்டு இருந்ததால் வயது பற்றி கூறு இயலாது. ஒரு கடினமான பொருட்கள் மீது விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/– திருமுருகானந்த்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.11.03 12:06:28 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி